செய்தி வெளியீடு எண் 427.　　　　　　　　　நாள்:- 08.07.2011

வணிகவரித் துறை

## பத்திரிகைக் குறிப்பு

மாண்புமிகு வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 08.07.2011 அன்று சென்னையில் வணிக வரித் துறை அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்தார்கள். ஆய்வின் போது திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., செயலர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை மற்றும் திரு.ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., முதன்மை செயலர் / வணிக வரி ஆணையர் உடன் இருந்தனர்.

தமிழகத்திலுள்ள அனைத்து வணிகவரி மற்றும் செயலாக்க உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட இப்பணித் திறனாய்வு கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரி வசூல், மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்தல், செயலாக்கப் பிரிவின் ஆய்வு மற்றும் திடீர் தணிக்கை பணிகள், வணிகர்களின் பதிவுகள் மற்றும் பதிவு நீக்கங்கள், வரி திரும்பப் பெறுதல் தொடர்பான விண்ணப்பங்களை ஆய்வு செய்தல், பின்தங்கிய வரி

விதிப்பு இனங்களை முடித்தல் மற்றும் வரி நிலுவைகளை வசூலித்தல் ஆகியவற்றினை கூர்ந்தாய்வு செய்து, பணிகளை சிறப்பாகச் செய்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்கள்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 2011–2012–ஆம் நிதியாண்டில், முதல் மூன்று மாதங்களில் ரூபாய் 8720.53 கோடி வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்கள். இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைக் காட்டிலும் 20.04 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006–ன் கீழ் மே 2012–ஆம் மாதம் 224947 வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்துள்ளார்கள் எனவும் தெரிவித்தார்கள்.

இம்மாநிலத்தின் சொந்த வருவாயில் வணிக வரிகளின் மூலம் பெறப்படும் வருவாய் ஏறத்தாழ 70 விழுக்காடு வணிக வரிகளின் மூலம் பெறப்படும் வருவாயாக உள்ளதால், துறை அலுவலர்கள் வரி வசூலில்

....3

தனிக் கவனம் செலுத்த வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அமல்படுத்த திட்டமிட்டுள்ளதால், வணிக வரித் துறை மூலம் பெறப்படும் வருவாய் உயர்த்தப்பட வேண்டும் என்றும், அதே, நேரத்தில், வரி செலுத்துவோரின் நல்லுறவை வளர்க்கும் வண்ணம், துறையின் நடவடிக்கைகள் அமைவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தொழில் நுட்பத்தினை துறையில் பெருமளவு பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள். மேலும், துறையின் நடவடிக்கைகள் சிறப்பாக செயல்பட தேவையான வசதிகளை அரசு செய்து தருமென உறுதியளித்தார்கள்.

வணிகவரித் துறை,
சென்னை.